விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 புரட்டாதி 04 புதன்கிழமை (20.09.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 266

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# இலங்கை இராணுவத்திற்கு அமெரிக்கா ஆயுத உதவி!

## பயங்கரவாதத்தை ஒழிக்க உதவுவதாக தெரிவிப்பு



(கொழும்பு)

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு இலங்கைக்கு ஆயுத உதவிகளை வழங்க தயாராக இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கத்திற்கும் இராணுவத்தினருக்கும் பல்வேறு வழிகளிலும் உதவ அமெரிக்கா தயாராக இருப்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ரொபட் ஓ ப்ளக் தெரிவித்துள்ளார். நேற்று சினமன்ற் கிராண்ற் ஹோட்டலில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் விமானத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப்புலிகளின் நிலை மீது விமானப்படையினர் குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டதாக தெரிய வருகிறது.

மற்றுமொரு தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாக தமக்கு உளவுத்தகவல்கள் கிடைத்ததாக இராணுவத் தரப்புகள் தெரிவிக்கின்றன. அங்கு ஏற்பட்ட சேதவிபரம் குறித்து தகவல் எதுவும் இல்லை. (ச)

## யசூசி அகாஷி இலங்கை வருவார்

இலங்கைக்கான யப்பானிய சமாதான பிரதிநிதி யசூசி அகாஷி விரைவில் இலங்கை வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் மோதல்கள் இடம்பெற்று வரும் சந்தர்ப்பத்தில் எவ்வாறு சமாதான முனைப்புக்களை முன்னெடுப்பது என்பது குறித்து யப்பான் (04 ஆம் பக்கம் பார்க்க)

## தற்போதைய நிலைமைகள் குறித்து இரு தரப்பினரும் ஆலோசிக்க வேண்டும்

### அமைச்சர் ஹெகலிய ஆலோசனை

(கொழும்பு)

போர்நிறுத்த ஒப்பந்தம் குறித்தும் தற்போதைய கள நிலைவரம் குறித்தும் இரு தரப்பினரும் ஒன்றாக அமர்ந்து கலந்தாலோசிக்கவேண்டுமென பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி.தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாம் ஒன்றாக அமர்ந்து விவாதிக்க வேண்டும். நாம் இருவரும் இருவேறு துருவங்களாக வெவ்வேறு திசையில் இருந்து கொண்டு தகவல்களை கொண்டு செல்பவர்கள் மூலம் பேசமுடியாது. முதலில் நாம் இன்னொரு தடவை பேச வேண்டும் என்றார்.

அரசிற்கும் விடுதலைப்புலிகளிற்குமிடையிலான இரண்டாவது பேச்சு வெற்றிகரமாக முடிந்திருந்தால் தற்போதைய நிலைமைகள் சுமுகமாக இருக்கும் என்றார்.

இரண்டாவது பேச்சு நடப்பதற்கு அரசாங்கம் தன்னாலான அனைத்தையும் செய்திருக்கின்றது. ஆனால் துரதிஷ்டவசமாக ஜெனீவாவில் முதலாவது பேச்சு நடத்த மறுதினம் முதல் விடுதலைப்புலிகள் இதனைத் தான் செய்கின்றார்கள்.

இது மிகவும் தெளிவாக தெரிகிறது. மிகவும் ஆதாரத்துடன் இருக்கின்றது என்றார். 2002 ஆம் ஆண்டு போர் (04 ஆம் பக்கம் பார்க்க)



## அச்சுவேலியில் வைத்து இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி சந்தியில் ஐங்கரன் கூல்பார் உரிமையாளர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி பத்தமேனியைச் சேர்ந்த யோகராசா தமிழ்ச்செல்வன் (வயது 23) என்ற வர்த்தகரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்றுக் காலை 7.15 மணியளவில் தனது கடையைத் திறந்து அலுமாரியைத் துப்புரவு செய்யும்போது ஆயுததாரிகளால் இவர் சுட்டுக் (04 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை நோக்கி பீரங்கித் தாக்குதல்

### 4 படையினர் பலி

(யாழ்ப்பாணம்)

முகமாலை நோக்கி விடுதலைப்புலிகள் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் பலியாகியதாக தேசிய பாதுகாப்பு மத்தியநிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலில் மேலும் அறுவர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தென்னிலங்கையிலிருந்து 25 ஊடகவியலாளர் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வந்தது.

அவர்கள் இராணுவ பாதுகாப்புடன் கவச வாகனங்களில் மிருசுவிலுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மூதூரில் பணியாற்றிய ஆசிரியர் கரணவாயில் சுட்டுக்கொலை

### வெள்ளை வானில் வந்தோர் கைவரிசை

(துன்னாலை)

கரணவாய் மூத்த விநாயகர் கோயிலடியில் வைத்து ஆசிரியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டிலேயே அவர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

மூதூரில் ஆசிரியராகப் பணிபுரியும் கரணவாய் கிழக்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவானந்தம் (வயது 32) என்பவரே சுடப்பட்டவராவார்.

இவர் தனது வீட்டிலிருந்து கரணவாய் தூதாவளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சென்றபோது இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சூட்டுக்கு இலக்கான இவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கோதுமை மாவிற்கு பதிலாக மரவள்ளி மா உபயோகம்

தற்போது காணப்படுகின்ற கோதுமை மா தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யமரவள்ளி மாவைப் பயன்படுத்தலாம் என தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதில் கிட்டதட்ட 35 வீதம் காபோவைத ரேற்று காணப்படுகின்றது. விவசாயிகளிட மிருந்து நேரடியாக மரவள்ளிக்கிழங்கை கிலோ 12-15 ரூபாவுக்கும் சந்தையில் கிலோ 25 ரூபாவுக்கும் பெற்றுக் கொண்டு மர வள்ளி மாவைத் தயாரிக்கலாம் என விவ சாய போதனாசிரியர் திருமதி யோ.ஐமுகன் தெரி வித்துள்ளார்.

மரவள்ளி மாவை தயாரிக்கும் முறை மற் றும் அம் மாவைப் பயன்படுத்தித் தயாரிக் கப்படும் உணவு என்பன குறித்தும் அவர் விளக்கமளித்துள்ளார்.

*மரவள்ளி மா தயாரிப்பு:-*

மரவள்ளிக் கிழங்கின் தோலை உரித்து நீரில் சுத்தமாகக் கழுவிய பின் சிறு சிறு சீவல் களாக்கி 2அல்லது 3 நாட்கள் வெயிலில் நன்றாகக் காயவைக்கவும்.

பின்புதேவைக்கேற்ற அளவு சீவலை உரலில் இடித்தே அல்லதுஆலையில் கொடுத்து அரைத்தோ பயன்படுத்தலாம்.

ஒரு கிலோ கிழங்கிலிருந்து அண்ணள வாக 300 கிராம் மாவைப் பெறலாம்.

*மரவள்ளி மாவில் சுவையான ரொட்டி*

*தேவையான பொருள்கள்*

மரவள்ளி மா-500 கிராம், வெங்காயம் சிறிதளவு, மிளகாய் சிறிதளவு, தேங்காய் திருவல் சிறிதளவு, உப்பு தேவையான அளவு, நீர் தேவையான அளவு.

*செய்முறை:-*

ஒரு கோப்பையில் மரவள்ளிமாவை இட்டு தேங்காய்ப்பூ, வெங்காயம், மிளகாய் என் பவற்றைச் சேர்த்து மாவுடன் கலக்கியபின் னர் தேவையான உப்பு, நீரூற்றி குழைத்து சாதாரணமாக ரொட்டி மாவின் பதத்திற்கு எடுக்க வேண்டும்.

பின் சிறுசிறு உருண்டைகளாக்கி அவற் றை இலையில் தட்டி எடுத்து அடுப்பில் உள்ள கல்லில் வேக வைத்துஎடுக்கவும். பின்னர் சுடச்சுட உண்டால் நல்ல சுவையாகவும் வாச னையாகவும் இருக்கும். (ச)

# டாங்கிகளில் பயணம் மேற்கொள்வதை பத்திரிகையாளர்கள் தவிர்க்க வேண்டும்

## இளந்திரையன் சுட்டிக்காட்டு



இராணுவ வண்டிகளை இலக்கு வைத் தே முகமாலையில் தாக்குதல் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி. தமிழோசைக்குக் கருத்துத் தெரி வித்தபோதே இவ்வாறு தெரிவித்தார். இரா ணுவ முன்னரங்க நிலைகளில் அவர்களின் வண்டிகளில் ஊடகவியலாளர்கள் பயணிப் பதென்பது மிகவும் ஆபத்தான விடயம்.

தற்போது வலிந்த தாக்குதல்கள் இடம் பெற்று வரும் வேளைகளில் இராணுவத்தி னர் டாங்கிகள் கவச வாகனங்களில் வந்து தாக்குவது வழக்கம்.அவ்வாறான நிலையில் அவர்களின் வாகங்கள் மீதே நேற்று தாக்குதல் நடத்தப்பட்டிருக்கக் கூடும் என இளந்திரையன் தெரிவித்தார்.

இதேவேளை முன்னரங்கப் பகுதிகளுக்கு பத்திரிகையாளர்கள் வருகிறார்கள் என்பது குறித்து தமக்கு அறிவிக்கப்படவில்லை எனவும் இளந்திரையன் குற்றஞ்சாட்டினார். (ச-5)

# விமானத் தாக்குதலை நிறுத்த இராணுவம் ஆலோசனை

சர்வதேச நாடுகளின் தலைவர்கள் பங் கேற்கும் தொடர் கூட்டங்கள் நடைபெறும் நிலையில் தமிழர் தாயகம் மீதான விமானக் குண்டு வீச்சுச் சம்பவங்களை தற்காலிக மாக இடைநிறுத்த இராணுவம்ஆலோசிப்ப தாக கொழும்பு ஊடகம் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவில் விமானக் குண்டு வீச்சு நடத்தப்பட்டது. இதனையடுத்து அங்கிருந்த அப்பாவிச் சிறார்கள் படுகொலைசெய்யப் பட்டதாக விடுதலைப்புலிகளால் கூறப்பட்டது.

இத்தகைய நிலைமைகள் தொடர்ந்து மீள ஏற்படாத வகையில் ஜெட் விமானங்க ளை மீள அழைப்பது குறித்து யோசிக்கப் படுகின்றது.

குறிப்பாக தற்போது ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டம் மற்றும் அணிசேரா நாடுக ளின் கூட்டம் நடைபெறும் சூழ்நிலையில் இத னைச் செயற்படுத்த ஆலோசிக்கப்படுகிறது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று மட்டக்களப்பில் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளமைகுறிப்பிட த்தக்கது. (ச-5)

## மட்டக்களப்பில் கிளைமோர் தாக்கு

மட்டக்களப்பு கிரான் கோரலி மடு பகுதி யில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடும் இராணுவத்தினரை இலக்கு வைத்து மறைத் து வைக்கப்பட்ட கிளைமோர் ஒன்று நேற்றுக் காலை 10.30 மணியளவில் வெடித்துள்ளது. எவருக்கும் சேதமேற்படவில்லை என பாது காப்புத்தரப்பினர் தெரிவித்துள்ளனர். (ச)

# சர்வமதப் பிரார்த்தனையும் மாபெரும் கண்டனப் பேரணியும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புனித திரேசாள் ஆலயத்தி னர் நாளை வியாழக்கிழமை சர்வமதப் பிரார் த்தனையும் மாபெரும் கண்டனப் பேரணி யையும் நடத்தவுள்ளனர்.

புனித திரேசாள் ஆலயத்தில் மாலை 3 மணிமுதல் 4மணிவரையும் சர்வமத வழி பாடு இடம்பெற்று அதனைத் தொடர்ந்து அர சின் மனித உரிமை மீறல்களை சர்வதேச சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டி கண் டனப் பேரணியும் இடம்பெறும்.

பட்டினிச் சாவை எதிர்நோக்கிக் கொண் டிருக்கும் யாழ்.குடாநாட்டுமக்களைப் பாது காப்பதற்கான அவசரத் தேவையாக குடா நாட்டுக்கான தரைவழிப் பாதையைத் திறக் குமாறும்,

குடாநாட்டிலும் ஏனைய தமிழ்ப் பிரதேசங் களிலும் நாள்தோறும் நடைபெற்றுக் கொண் டிருக்கும் ஆட்கடத்தல்கள், மனிதப் படுகொ லைகள், கொள்ளைகள், பொருளாதாரத் தடை, மருந்துப் பொருள் தட்டுப்பாடு போன்ற மனித நேயமற்ற செயற்பாடுகளுக்கு எதிரா கவும்,

கடத்தப்பட்ட ஜிம்புறவுண் அடிகளார் மற் றும் அவரின் உதவியாளர் ஆகியோரின் விடு தலையை வலியுறுத்தியும் இந்தக்கண்டனப் பேரணியில் கோரிக்கைவிடப்படவுள்ளது (ச-5)

# நல்ல நிலையில் இருந்த 16 லொறிகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

முகமாலையில் கைவிடப்பட்ட நிலையில் நின்ற 16 லொறிகள் அதன் உரிமையாளர் களிடம் கையளிக்கப்பட்டது. நேற்று கொடி காமம் பொலிஸ் நிலையத்தில் வைத்து இந்த லொறிகள் வழங்கப்பட்டன.

முகமாலையில் 52ற்கும் மேற்பட்ட லொறிகள் விடப்பட்டிருந்தன. இந்நிலையில் கடந்த மாதம் இடம்பெற்ற அசாதாரண சூழ் நிலைகளினால் அவற்றை மீட்க முடியவில் லை.

அதன் பின்னர் இராணுவத்தினர் அவற் றில் நல்ல நிலையிலிருந்த 16 லொறிகளை மீட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைத்தனர்.

மிகுதியாக 12 லொறிகள் நல்ல நிலை யில் உள்ளதாகவும் அவை மீட்கப்பட்டு உ... யவர்களிடம் ஒப்படைக்கப்படும் என இராணு வம் தெரிவித்துள்ளது.

மிகுதி லொறிகள் முற்றாக அழிந்து போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# 800 பயணிகளுடன் கப்பல் இன்று மாலை புறப்படுகிறது

800 பயணிகளை ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறையிலிருந்து திருகோண மலையை நோக்கிக் கப்பல் புறப்படவுள்ளது.

இக் கப்பல் இன்று மாலை புறப்படும் என சிவில் ஒருங்கிணைப்பு அலுவலக அதிகாரி கேணல் சில்வா தெரிவித்தார்.

நேற்றுக் காலை சிங்கள மகா வித்தியா லய மைதானத்தில் கூடிய சுமார் 3 ஆயிரம் பயணிகளில் வெளிநாட்டுப் பிரஜா உரிமை பெற்றவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், அரச உத்தியோகஸ்தர்கள், நோயாளர்கள் என 800 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்றுப் பிற்பகல் காங்கேசன் துறை முகத்திற்குக் கொண்டு செல்லப்பட் டனர். அங்கிருந்து இன்று பிற்பகல் திருகோ ணமலை நோக்கிப் புறப்படவுள்ளனர். (ச-5)

# கப்பலுக்காகச் சென்ற பெண் மயங்கி வீழ்ந்து மரணமானர்

கப்பலுக்குச் செல்வதற்காக வெகு நேரம் வரிசையில் நின்ற குடும்பப் பெண்மணி திடீ ரென ஏற்பட்ட மாரடைப்பினால் உயிரிழந்து ள்ளார்.

திருகோணமலைக்குச் செல்லும் கப்பலில் இடம்பிடிப்பதற்காக நேற்று சிங்கள மகாவித் தியாலய விளையாட்டு மைதானத்தில் நீண்ட நேரம் வரிசையில் நின்ற குறித்த பெண்மணி திடீரென மயங்கி வீழ்ந்து மாரடைப்புக்காரண மாக உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் வசித்து வரும் மாமகேஸ்வரி அரியநேசன் (வயது-57) என்ற இந்தப் பெண் மணி நல்லூர்க் கந்தன் உற்சவத்திற்காக தனது உறவினர்வீட்டிற்கு கடந்த மாதம்வந் துள்ளார்.

பின்னர்ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை யால் ஏ-9வீதி மூடப்பட்டது. இதனையடுத்து கொழும்புக்குச் செல்ல முடியாமையால் கப் பலுக்காக ஒவ்வொரு முறையும் சிங்கள மகா வித்தியாலயத்திற்குச் சென்று திரும்பியுள் ளார்.

நேற்றும் அவ்வாறு நீண்ட நேரம் நின்றி ருந்த வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட நீதிவான் இ.த. விக்னராஜா பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக் குமாறு யாழ்.பொலிஸாருக்கு உத்தரவிட் டார்.

இதேவேளை கடந்த மாதமும் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஒருவர் இவ்வாறு மரண மானதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# அகதி என்ற போர்வையில் புலிகள் ஊடுருவலாம்

## கருணாநிதி எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கை அகதிகள் என்ற போர்வையில் விடுதலைப்புலிகள் தமிழகத்திற்குள் ஊடு ருவாமல் இருக்க எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இதற்காக தீவிரமாக கண்காணிக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் கருணா நிதி அறிவித்துள்ளார்.

இதுவரை இலங்கையிலிருந்து 13 ஆயி ரத்து 844 தமிழர்கள் அகதிகளாக வந்து ள்ளனர். அகதிகள் என்ற போர்வையில் எமது மண்ணில் விடுதலைப்புலிகளை அனுமதிக்கக் கூடாது.

எனவே உண்மையான அகதி யார் என் பதை அறிந்து பகுத்தறிய பொலிஸாரும் வருவாய்த் துறையினரும் இணைந்து நட வடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ச)

# மற்றைய சடலமும் இனங்காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மூன்று கோவிலடிப் பகுதி யில் மீட்கப்பட்ட இரு இளைஞர்களின் சடலங் களில் மற்றைய சடலமும் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கிளிநொச்சியைச் சேர்ந்த, சுன்னாகத் தில் வசித்து வரும் சிவானந்தம் பிரசன்னா (வயது-27) என அவரது உறவினர்கள் அடை யாளம் காட்டியுள்ளனர்.

மற்றைய இளைஞரின் சடலத்தை கடந்த 17 ஆம் திகதி அவரது பெற்றோர்கள் அடை யாளம் காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ச)

# வெள்ளைவான் மீது துப்பாக்கிச் சூடு

(கம்பஹா)

நேற்று அதிகாலை 4 மணியளவில் கம் பஹா மாவட்டத்தில் வியாங்கொட புகையி ரதப் பாதைக்கு அருகில் வெள்ளைவான்மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிர யோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பீடாதிபதி கமலநாதன் நேற்று ஓய்வு பெற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல் லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் நேற்று தனது பணியிலிருந்து ஓய்வு பெற் றார்.

இன்று தனது 60-வது பிறந்த நாளைக் கொண்டாடும் அவர் பீடாதிபதியாக இருந்த காலத்தில் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பாடுபட்டுள்ளார். (ச-5)

# சமாதானப் பேச்சுவார்த்தை...

நிபந்தனையற்ற பேச்சா அல்லது நிபந்த னையுடனான பேச்சா என்பது குறித்த தக வல்கள் தற்போதைக்குக் கூற முடியாது. ஆயினும் பேச்சுகளுக்கான மார்க்கங்கள் தயாராகவே உள்ளன.

ஒக்டோபர் மாதம் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகுமா? என்பது குறித்து மேலதிக தகவல்கள் எதுவும் தற்போது கூற முடியா விடினும் பேச்சுக்களை மீள ஆரம் பிக்கவே நோர்வே முயற்சி எடுத்து வருகின் றது.

இம் மாத இறுதியில் எரிக்சொல்ஹெய்ம் இலங்கை வருகைதரவுள்ளார்என ஊடகங் களில் வெளியான செய்தி ஊர்ஜிதப்படுத்தப் படவில்லை.

அவரின் அவ்வாறான பயணம் இதுவரை க்கும் நோர்வேத் தூதரகத்தினால் உறுதி செய்யப்படவில்லை.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கு எந்தெந்த உரிமைகள் தேவை என்று கருதுகிறீர்களோ அதே உரிமைகளை அனைத்து மனிதர்களுக்கும் வழங்குங்கள். *-இங்கர்சால்*

வலம்புரி

## தமிழ்-முஸ்லிம் உறவு பாதுகாக்கப்பட வேண்டும்

பொத்துவிலில் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இலங்கையில் நிலவும் மனித அவலங்களை வெளிப்படுத்துவதாக வுள்ளது.

அந்தக் கொலைகளை யார் செய்தார்கள் என்ற விசாரணைகளுக்கு முன்னதாக, அநியாயமாக மனித உயிர்கள் பறிக்கப்படும் நிட்டூரம் இந்த மண்ணில் இல்லாது போக வேண்டும்.

ஆணைக்குழுக்களும் விசாரணைக்குழுக் களும்அமைக்கப்படுவதனால் கொலைகள் நின்று விடமாட்டாது என்பதற்கு நாட்டின் கடந்த கால வரலாறு நல்லதோர் எடுத்துக் காட்டாகும்.

பொதுமக்கள் வாழும் சூழல் முழுவதும் ஆயுதம் தரித்தவர்கள் காத்திருக்கும்போது அங்கே அமைதியை ஏற்படுத்த முடியாது.

இந்த நாடு தனித்து ஒரு இனத்துக்கு மட்டும் சொந்தம் என்ற உரிமை கோரலால் மனித உயிர்கள் பறிக்கப்படுகின்றன.

ஆட்சியில் இருப்பவர்களுக்கு இந்தத் துயரம் தெரிவதாகவில்லை. அவர்கள் தமது பதவியைக் காப்பாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாகவிருக்கிறார்கள்.

இந்நிலையில் பொத்துவில் பகுதியில் பதினொரு முஸ்லிம் தொழிலாளர்கள் கோரமாகக் கொலை செய்யப்பட்டுள்ளமையானது, சிறுபான்மையினங்களுக்கிடையேயான உறவை சீர்குலைக்கச் செய்யும் திட்டமோ என எண்ணத் தோன்றுகிறது.

யுத்த சூழ்நிலையில் இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தி கொலைகளையும் கொள்ளைகளையும் மலிவடையச் செய்யும் கயமைத்தனங்கள் நடைபெறுவது வழமை என்பதால் முஸ்லிம் மக்கள் நிதானமாக நடந்து கொள்வது மிகவும் அவசியமானது.

தமிழ்-முஸ்லிம் உறவு பலமாக இருக்கும் போது எவராலும் எதனையும் சாதிக்க முடியாது என்ற உண்மை நிலையைப் புரிந்து கொண்டால் தேவையற்ற பிரச்சினைகள் எழுவது தடுக்கப்படும்.

வடக்குக் கிழக்கு- தமிழர் வாழ்வியம் என்ற பதங்கள் எதுவுமே முஸ்லிம் மக்களை விலக்கியது அல்ல.

தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்கள் தமிழர்களுடனான உறவைப் பேணுவதில் நிதானமான போக்கை கடைப்பிடிக்க வேண்டும்.

எந்த சம்பவம் நடந்தாலும் அதுபற்றி முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு உண்மையைக் கண்டறிவது தீயசக்திகளின் சதித்திட்டங்களைத் தடுக்க உதவும்.

இதற்கு முஸ்லிம் அரசியல் கட்சிகள் தெளிந்த சிந்தனையுடன் செயலாற்ற வேண்டும்.

# நீதி சமாதானக் குழுவினால் ஜனாதிபதிக்கு3-வது கடிதம்

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டிப் பங்குத் தந்தை ஜிம்புறவுண் அடிகளார் காணாமல் போய் ஒரு மாதம் முடிபடைந்த நிலையில், யாழ். கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மூன்றாவது கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்ட கத்தோலிக்கக் குருவான அருள்பணி ஜிம் புறவுண் காணாமல் போய் இன்றோடு ஒரு மாதமாகிறது. யாழ்ப்பாண மற்றும் மன்னார் மறை மாவட்ட கத்தோலிக்கர் இன்றும் துயரிலும் விரக்தியிலும் மூழ்கியவர்களாக இருக்கிறார்கள்.

இரண்டே ஆண்டுகள் தான் அவர் குருவாகப் பணியாற்றியிருந்தாலும் அவருடைய குருத்துவ அர்ப்பணமானது மக்கள் மத்தியில் அவர் மட்டில் மிகுந்த அன்பையும் மதிப்பையும் உருவாக்கியுள்ளது.

எமது நீதி சமாதான ஆணைக்குழு ஏற்கனவே இரண்டு வேண்டுகோள்களை தங்கள் கவனத்திற்கு சமர்ப்பித்துள்ளது. எங்கள் ஆயரும் இலங்கை ஆயர் மன்றத்தினரும் திருத்தந்தையின் தூதுவரும் ஏற்கனவே வேண்டுகோள்களை சமர்ப்பித்துள்ளது. ஆயினும் இதுவரை தங்களிடமிருந்து பதிலேதும் கிடைக்காதது எம்மை கவலைக்குள்ளாக்குகிறது.

சம்பவம் நிகழ்ந்த அல்லைப்பிட்டிப் பகுதி முழுவதும் கடற்படையினரின் பாதுகாப்பில் உள்ளது. ஆகவே அவர்களை அறியாமல் எமது குருவுக்கு எதுவும் நடந்திருக்க முடியாது என்பது வெளிப்படை. முப்படைகளின் தளபதியாகிய தாங்கள், குருவானவர் காணாமல் போனது தொடர்பாக உண்மையை வெளிக்கொணர முடியும் என்றே இன்று நாங்கள் நம்புகின்றோம்.

அவர் காணாமல் போன 31 ஆம் நாளை நினைவு கூரும் முகமாக யாழ்.ஆயரின் தலைமையில் மரியன்னை பேராலயத்தில் ஒரு நாள் உண்ணாவிரத வேண்டுதல் வழிபாட்டில் ஒன்று கூடியிருக்கிறோம்.

இங்கிருந்துதான் நாங்கள் தங்களது உடனடி நடவடிக்கைக்காக பின்வரும் வேண்டுகோள்களைச் சமர்ப்பிக்கின்றோம்.

குருவானவரையும் உதவியாளரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.அல்லது அவர்கள் குற்றம் ஏதும் இழைத்திருந்தால் உடனடியாக நீதிமன்றில் நிறுத்த வேண்டும்.

அவர் கைது செய்யப்படவில்லை என்றால் அவர் காணாமல் போனது தொடர்பாக உண்மைகளை வெளிக்கொணரக் கூடிய சுயாதீன விசாரணையை ஆரம்பித்தல் என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# கண்காணிப்புக் குழுவிலிருந்து விலகுவதானால் இரு தரப்பும் கூட்டாக அறிவிக்க வேண்டும்

போர் நிறுத்த காலத்தில் தமிழ் தாயகப் பிரதேசத்தை ஆக்கிரமித்திருப்பது அரசாங்கத்தின் ஒரு மோசமான செயற்பாடு என்று இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

திருகோணமலை மாவட்ட அரசியல் துறைச் செயலகத்தில் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும்இடையில் நேற்றுச் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் திருகோணமலை மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் சி.எழிலன், மாவட்டக் கண்காணிப்புக் குழுத் தலைவர் சிகி, மட்டக்களப்பு மாவட்டக் கண்காணிப்புக் குழுத் தலைவர் சிகுட்சன் ஆகியோர் பங்கேற்றனர்.

இச் சந்திப்பின் போது கண்காணிப்புக் குழுவினரிடம் சி.எழிலன் கூறியதாவது,

போர் நெருக்கடியான காலங்களில் மக்கள் தமது வாழ்விடங்களில் நிம்மதியான வாழ்க்கையினை வாழ்ந்து வந்தனர். ஆனால் தற்போது போர் நிறுத்தம் நடைமுறையில் உள்ளதாகக் கூறப்படுகின்ற நிலையில் சிறிலங்கா இராணுவத்தினர் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட ஈவிரக்கமற்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கை காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து மரங்களின் கீழும் கொட்டில்களின் கீழும் அவல வாழ்வு வாழ்கின்றனர்.

இந்நிலையில் தற்போது யுத்தநிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளதா?

தடைசெய்யப்படாத பொருட்களைக் கூட மக்கள் கொண்டு செல்ல முடியாத அவல நிலையினை சிறிலங்கா இராணுவத்தினர் உருவாக்கியுள்ளனர். இச்செயற்பாடுகளை நிறுத்த உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் சி.எழிலன்.

இதற்குப் பதிலளித்த போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர், தற்போதைய இராணுவ ஆக்கிமிப்பு நடவடிக்கையானது மோசமான செயற்பாடு என்பதைத்தாம் ஏற்றுக் கொள்வதாக தெரிவித்ததுடன் போர் நிறுத்தம் நடைமுறையில் இல்லை என்று இரண்டுதரப்பினரும் தெரிவிக்கும் பட்சத்திலேயே தாம் போர்நிறுத்தக் கண்காணிப்புப் பணியிலிருந்து விலகுவதா? இல்லையா? என்ற நிலைப்பாட்டினை வெளிப்படுத்த முடியும் என்றும் தெரிவித்துள்ளனர். (ச-5)

# பஸ்ஸிற்கான டீசலை வழங்குவது குறித்து தீர்மானங்கள் எதுவும் எடுக்கவில்லை

## பெற்றோலியக் கூட்டுத்தாபன தகவல்கள் தெரிவிப்பு

வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கான டீசலை வழங்குவதற்கு பெற்றோலிய வளத்துறை அமைச்சரின் அறிவித்தல் கிடைக்கவில்லை என பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் 11 ஆம் திகதிக்கு பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழல்காரணமாக ஏற்பட்ட நட்டத்தினால், வட பிராந்திய போக்குவரத்துச் சபை ஐந்து தடவை டீசலைப் பெற்றுக் கொண்டன. இதற்காக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 2.29 மில்லியன் ரூபா கடன் செலுத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் தொடர்ந்தும் அவர்களுக்கு டீசலை வழங்கிக் கொண்டிருக்க முடியாது. இதில் ஒருதடவைக்கான பணத்தையாவது செலுத்தும் சந்தர்ப்பத்தில் டீசலை வழங்க நடவடிக்கை எடுக்க முடியும் என பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

இதேவேளை தற்போது தமது வங்கிக் கணக்கில் பணம் இன்மையால் இவர்களுக்கான பகுதியளவான பணத்தைக் கூட செலுத்த முடியாதுள்ளதாக வட பிராந்தியப் போக்குவரத்துச் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதுஇவ்வாறிருக்க இது தொடர்பாக பெற்றோலிய வளங்கள் மற்றம் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஏ.எச்.எம். பௌசியிடம் கேட்ட போது அசாதாரண சூழலில்ஏற்பட்ட நட்டத்தை தமது அமைச்சு மூலம் செலுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் எமக்குத் தெரிவித்தார்.

வட பிராந்தியப் போக்குவரத்துச் சபையின் பஸ் சேவைகள் பாதிக்கப்பட்டமையால் பொதுமக்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் தமது பிரயாணத்தில் பல சிக்கல்களை எதிர்நோக்குவதனால் இதற்கான தீர்வை அமைச்சர் விரைந்து எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.(ச-5)

# சமாதானப் பேச்சுவார்த்தை குறித்து விரைவில் சாதகமான பதில் வரும்

## நோர்வேப் பேச்சாளர் நம்பிக்கை

தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க இரு தரப்பினருடனும் நோர்வே தொடர்ந்தும் முக்கிய பேச்சுக்களை நடத்திவருகிறது. வெகுவிரைவில் சாதகமான சூழ்நிலை உருவாகும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன என்று நோர்வேத் தூதரகப் பேச்சாளரும் முதன்மை செயலாளருமான எரிக் நேன்ஸ் பேர்க் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது;

இணைத் தலைமைகளின் கூட்டு முடிவில் எரிக் சொல்ஹெய்ம் வெளியிட்ட அறிக்கை குறித்த வாதப் பிரதி வாதங்களை நோர்வே அவதானித்தே வருகின்றது.

இணைத்தலைமை நாடுகள் இருதரப்பினரதும் கருத்துக்களின்படி தமது முடிபினை அறிவித்தன. தற்போது கூட இரு தரப்பும் தாம் சமாதானப் பேச்சுக்களுக்குத் தயார் என ஒத்துக் கொண்டுள்ளன.

இருதரப்பும் இணங்கும் தினத்தில், இடத்தில் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டிய வழிவகைகளை நோர்வே முன்னரைப்போலவே சிறப்பாக ஏற்படுத்திக் கொடுக்க என்றுமே தயாராகவுள்ளது. (02 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் ஆணையத்திலிருந்து இலங்கையை வெளியேற்றத் தீர்மானம்?

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்திலிருந்து இலங்கை அரசாங்கம் வெளியேற்றப்படக் கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது. ஆசிய மனித உரிமைகள் ஆணையம் இது குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை மாநாட்டுத் தீர்மானங்களில் இலங்கை கைச்சாத்திடவில்லை என்றும் அந்த அமைப்புக்களால் இலங்கையை கட்டுப்படுத்த முடியாது என்றும் கடந்த வாரம் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆகையால் சர்வதேச மனித உரிமைகள் சமூகத்திலிருந்து இலங்கையை வெளியேற்ற வேண்டும். இலங்கை உச்ச நீதிமன்றத்தின் ஒப்புதலின் அடிப்படையில் உரிய நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் மேற்கொள்ள வேண்டுமென்று அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

உச்ச நீதிமன்ற வழக்கு ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத் தீர்மானங்கள் அரசாங்கத்தை கட்டுப்படுத்தாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (ச)

# வைத்தியசாலை ஊழியர்கள் இருவர் சுட்டுக்கொலை

திருகோணமலையில் உள்ள அரபா நகர் பகுதியில் 98 ஆம் மைல்கல்லுக்கு அருகாமையில் கிண்ணியா தேசிய வைத்தியசாலை ஊழியர்கள் இருவர் இனந்தெரியாத நபர்களின் துப்பாக்கிப்பிரயோகத்திற்கு சிக்கி அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

இவர்கள் இருவரும் தமது கடமையினை முடித்துவிட்டு மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருக்கும்போது அவர்களை பின்தொடர்ந்து வந்த நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

நேற்று 5.30 மணியளவில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் மேற்படி சம்பவம் இடம் பெற்ற இடம் திருகோணமலை-கண்டி வீதியில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# அம்பாறையில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

(மட்டக்களப்பு)

அம்பாறை பொத்துவில் பிரதேசத்தில் 11 முஸ்லிம் பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்தும் அப் பகுதியின் விசேட அதிரடிப்படைப் பொறுப்பாளரை இடமாற்றம் செய்யக்கோரியும் பொத்துவில் பிரதேசத்தில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

அத்துடன் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கலந்து கொண்ட பேரணி ஒன்றும் நடைபெற்றது.

பொத்துவில் ஜிம்மாப் பள்ளிவாசலில் இருந்து புறப்பட்ட இப் பேரணி நகர வீதியூடாகச் சென்று மீண்டும் பள்ளிவாசலைச் சென்றடைந்தது.

பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதால் பொத்துவில் நகரம் வெறிச்சோடிக்காணப்பட்டது. நகரில் உள்ள அரச தனியார் அலுவலகங்கள் மூடப்பட்டிருந்தன.

தமிழ் சிங்கள முஸ்லிம் கடைகள் எவையும் திறக்கப்படவில்லை. அவர்கள் அனைவரும் பேரணியில் இணைந்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டோர் கொலைக் கண்டித்து சுலோகங்களை ஏந்தியிருந்தனர். இதேவேளை அம்பாறையில் நேற்று முன்தினம் முதல் பதற்றம் நிலவி வருவதாக தெரிவிக்கப்பட்டது. (ச)

# கல்முனையில் தாக்கப்பட்டது இந்தோனேசியக் கப்பல்

கல்முனையில் கடந்த 17ஆம் திகதி மூழ்கடிக்கப்பட்ட கப்பல் இந்தோனேசியாவைச் சேர்ந்ததாக இருக்கலாம் என சந்தேகிப்பதாக கடற்படைப் பேச்சாளர் கொமாண்டர் டி.கே.பி. தசநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பான விசாரணைகள் தொடர்ந்தும் நடைபெறுவதாக நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்தார்.

குறித்த கப்பல் மீது தாக்குதல் மேற்கொண்டபோது பாரிய சத்தம் கேட்டதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

இதேவேளை விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை ஏற்றிச்சென்ற கப்பலைத் தாம் கல்முனைக் கடற்பரப்பில்வைத்து மூழ்கடித்ததாக கடற்படையினர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சு.க-ஐ.தே.கவிடையே நேற்று 2-ம் சுற்று பேச்சு

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்குமிடையேயான இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்று நடைபெற்றது.

இரு கட்சிகளும் இணைந்து செயற்படுவதற்கான பொதுச்செயல் திட்டத்தை உருவாக்குவதற்கான இக் கூட்டம் நேற்று காலை 9.30 மணியளவில் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

சுதந்திரக்கட்சியின் குழுவுக்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமை வகித்தார். அமைச்சர்கள் மைதிரிபால சிறிசேன, ஜோன் செனிவிரத்தின ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் குழுவுக்கு பிரதித்தலைவர் கரு ஜெயசூரியா தலைமை வகித்தார். மிலிந்த மொறகொட, ஜீ.எல்.பீரிஸ், ருக்மன் சேனநாயக்க, ஜோன் அமரதுங்க மற்றும் மாலிக் சமரவீர ஆகியோர் அக்குழுவில் இடம் பெற்றனர்.

இரு கட்சிகளிடையேயான முதலாவது பேச்சுவார்த்தை கடந்த வாரம் நடைபெற்றது. மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை எதிர்வரும் ஒக்டோபர் 3 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ச)

# பொத்துவில் படுகொலையை விசாரிக்க விசேட புலனாய்வுக்குழு அமைப்பு

(அம்பாறை)

பொத்துவிலில் 11 பேர் கொலைசெய்யப்பட்டமை குறித்து ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் விசேட புலனாய்வுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த குழு பல்வேறு கோணங்களில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை சம்பவம் இடம்பெற்ற இடத்தை அரசாங்க அமைச்சர்கள் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டனர்.

அக் கொலைச் சம்பவங்கள் குறித்து மக்களிடையே வன்முறைகள் ஏற்படுவதை தடுப்பதுடன் அவற்றை சுமுகமாக தீர்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இக் குழுவின் விசாரணை அறிக்கை விரைவில் தயாரிக்கப்பட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கையளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக அமைக்கப்பட்ட விசேட குழு பொத்துவில் பகுதிக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தற்போதைய...

நிறுத்த ஒப்பந்தம் குறித்து கவலைகள் இருக்குமானால் அது குறித்து நாம் நிச்சயமாகப் பேசுவோம்.

ஒவ்வொருவிடயமும் இருதரப்பினரும் கலந்துரையாடல்களில் விவாதிக்கப்பட வேண்டும். ஜெனீவா 2வது பேச்சு வார்த்தை தோல்வியடைந்தபோது வன்செயல்கள் அதிகரித்தமை ஒரு சிறந்த ஆதாரம்.

ஜெனீவா பேச்சுக்கு பின்பு ஒரு புதிய அத்தியாயம் தொடங்குகின்றது. இந்த விடயம் குறித்தும் நாங்கள் கையாளவேண்டும் என்றார். (ச-5)

## யசூசி அகாஷி...

ஆராய்ந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

யப்பானிய விசேட சமாதான பிரதிநிதி இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புகளைச் சந்தித்து பேச்சுக்களை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## மூதூரில்...

சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்படும் போது உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இவர் மூதூரில் இடம் பெற்ற மோதல் சம்பவங்களினையடுத்து தனது வீட்டிற்கு வந்ததாக தெரிவிக்கப்பட்டது. (ச-10)

## முகமாலை...

யாழ்.வந்த ஊடகவியலாளர்களுக்கு பலாலி இராணுவத் தளத்தில் வைத்து கடந்த இரு வாரகால நிகழ்வுகள் குறித்து வடக்கின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி விளக்கிக் கூறினார்.

இதேவேளை மிருசுவில் நோக்கிச் சென்று கொண்டிருந்த ஊடகவியலாளர்கள் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (ச-5)

## அச்சுவேலியில்...

கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு நேரில் சென்று மரண விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிபதி சறோஜினி இளங்கோவன் பிரேதபரிசோதனைகளுக்காக யாழ்.போதனாவைத்தியசாலையில் சடலத்தை ஒப்படைக்குமாறு அச்சுவேலி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ச)

## இலங்கை இராணுவத்திற்கு...

பயங்கரவாதத்தை எதிர்த்து போராடுவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் பல்வேறு வழிகளில் அமெரிக்கா உதவிவருகின்றது.

விடுதலைப்புலிகளை வெளிநாட்டுப் பயங்கரவாத இயக்கமாக சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் முதல் முதலாக பிரகடனப்படுத்தியது அமெரிக்கா தான்.

கடந்த மாதம்சுட 15 ஆயுதக் கொள்வனவு சந்தேக நபர்கள் சமஷ்டி புலனாய்வு பணியகம் மூலம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத மற்றும் வன்செயல்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்றைக்காண வருமாறு விடுதலைப்புலிகளுக்கு அமெரிக்கா தொடர்ந்தும் அழைப்பு விடுத்து வருகிறது என்று இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் றொபட் ஒ ப்ளக் தெரிவித்தார்.

இலங்கைக்கு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக மட்டும் இராணுவ உதவி வழங்கப்படும். இராணுவ உதவி வழங்கினால் எப்படி விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது என்ற நோக்கில் செயற்பட முடியும்.

பயங்கரவாத மோதல்கள் தொடர்பில் இராணுவத்தை வலுப்படுத்த உதவுவோம். தமிழீழ விடுதலைப் புலிகள் முதல் நடவடிக்கையாக பயங்கரவாதத்தைக் கைவிட வேண்டும். அதை செய்யாத நிலையில் அதை செய்ய வைக்கப்படும். இந்த அடிப்படையில்தான் இலங்கைக்கு உதவி வருவது தொடர்பாகத் தெரிவித்தோம்.

இருப்பினும் அமைதிப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வலுப்படுத்தப்படவேண்டும். பயங்கரவாதமானது சட்டத்தாலோ இராணுவ நடவடிக்கைகளாலோ மட்டும் தோற்கடித்துவிட முடியாது.

தமிழ் மக்களினது சட்டபூர்வமான முறைமைகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டும். இந்த நாட்டின் அரசியல் எதிர்காலத்தில் அனைத்து மக்கள் இனங்கள், மதங்களும் பங்கேற்கும் வகையிலான அரசியல் நோக்கு வேண்டும்.

இந்த வகையில் ஐக்கிய தேசியக்கட்சியும் சுதந்திரக்கட்சியும் இணைந்து செயற்படுவதை நாம் பார்க்கிறோம் என்றார்.

சமாதானத்திற்கு ஆதரவளிப்பதற்கான உதவியாக அமைந்த டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் இணைத் தலைமை நாடுகளின் ஒன்றாக தாமும் இருந்தமையை இட்டு அமெரிக்கா பெருமையடைகின்றது.

அண்மையில் பிரசல்ஸில் இடம் பெற்ற இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்தில் நானும் பங்கேற்றிருந்தேன். சமாதானத்திற்கான குறிப்பிடத்தக்க வாய்ப்பொன்று தற்போது உள்ளதாகவே இணைத் தலைமை நாடுகள் நம்புகின்றன.

இந்த வாய்ப்பினை இரு தரப்புக்களும் பற்றிபிடித்துக்கொள்ளும் என நாம் நம்புகின்றோம். அமெரிக்க அரசாங்கமானது நோர்வேயின் அனுசரணை மற்றும் கண் காணிப்புக்குழுவின் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவளிக்கும் என்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் றொபட் ஒ ப்ளக் தெரிவித்தார்.

கடந்த 8 ஆம் திகதி தனது பணிகளைப் பொறுப்பேற்றுள்ள றொபட் ஒ ப்ளக் மாலைதீவுக்கான அமெரிக்கத்தூதுவராகவும் செயற்படுகின்றார்.

1985 ஆம் ஆண்டு வெளிநாட்டு சேவையில் இணைந்த இவர் ரூனிசியா, அல்ஜீரியா, நைஜீரியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளில் உள்ள அமெரிக்கத் தூதுவராலயங் களிலும் பணியாற்றியுள்ளார். (ச-5)

31 ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 17 03 1952

இறப்பு 21 08 2006



அமரர் செல்லத்துரை திருச்செல்வம்

அன்பையும் பண்பையும் ஊட்டி
இன்பமாய் எமை வாழ வைத்தாய்
உத்தமனாய் நீ வாழ்ந்து
உயிர் தந்து எமை காத்தாய்
ஊர் போற்ற நாம் வாழ
உனக்குள்ளே நீ மகிழ்ந்தாய்
மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும்
உன் நினைவு நிழலாக எமை தொடருமையா
வாழ்க்கையில் உங்களை நேசித்தோம்
மரணத்தில் உங்களை மறவோம்.

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.

-குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.09.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.